# வேண்டிய முழுதும் தருவோய் நீ! வாழ்க பல்லாண்டு!

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்ற 22.01.2025 அன்று நடைபெற்ற ஒரு நிகழ்வில் பேசும்போது "நாளை ஒரு அதிமுக்கியமான அறிவிப்பை வெளியிடப் போகிறேன்" எனப் பூடகமாகக் குறிப்பிட்டார். இந்தச் செய்தி தொலைக்காட்சியிலும், சமூக ஊடகங்களிலும், வானொலியிலும் வெளிவந்த உடனே ஒரு திடீர் பரபரப்பு நாடு முழுவதும் பற்றிக் கொண்டது. ஆம்! நாடே பரபரத்தது; தளபதி அப்படி என்ன அறிவிப்பை வெளியிடப் போகிறார்? அரசியல் தொடர்பானதா அது? அல்லது திராவிட முன்னேற்றக் கழகம் சம்பந்தப்பட்ட செய்தியா? அமைச்சரவை மாற்றம் குறித்து ஏதேனும் முக்கியமான அறிவிப்பை வெளியிடப் போகிறாரா? என்று பலரும் பலவாறாக எண்ணத் தொடங்கினர். அரசியல் எதிரிகளின் நிலையோ மிகவும் பரிதாபமானது. ஆக, ஒட்டுமொத்த இந்தியாவே தமிழ்நாடு முதல்வர் தளபதி என்ன சொல்லப் போகிறார் என்ற பெருந்திகைப்பில் அமைதியற்ற நிலையில் தவித்தது.






**பொன்னான அறிவிப்பு:**

மறுநாளே, 23.01.2025 அன்று, தான் தெரிவித்ததுபோல தளபதி அவர்கள் அந்த அறிவிப்பை வெளியிட்டார். அது என்ன சாதாரணச் செய்தியா? அரசின் நிர்வாக முடிவு பற்றிய அறிவிப்பா? இல்லைஇல்லை! அது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மாபெரும் பிரகடனம். உலகத்தையே உற்று நோக்க வைத்த அந்தப் பிரகடனம் என்ன? **தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்கள் தனக்கே உரித்தான கம்பீரத்துடன் முழங்கினார். 5300 ஆண்டுகள் முன்னரே, தமிழ் மண்ணில் இரும்பின் பயன்பாடு இருந்ததை தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையினரால் சிவகளையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் வெளிக்கொண்டு வந்துள்ளன என்ற அரிய உண்மையைத்தான் ஆதாரப்பூர்வமாக உலகுக்கு உரக்கச் சொல்லித் தெரிவித்தார்.**

அந்த நேரம், தமிழ்நாட்டு மக்களையம் சிகரத்தைத் தொட்ட தமிழ் நாகரிகத்தையும், பண்பாட்டையும் அதற்கு அடித்தளமாகத் திகழ்ந்த அறிவாற்றல் நிறைந்த தமிழ் மொழியின் தொன்மையையும் உலக அரங்கில் பெருமையுடன் தலைநிமிரச் செய்த பொன்னான நேரம் அல்லவா?

**தமிழ்நாட்டின் இரும்பு மனிதர்:**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், நமது தளபதிக்கு பெயர் சூட்டும்போது ஸ்டாலின் என்ற பெயரை ஏன் வைத்தார் என நமக்குத் தெரியவில்லை. ரஷ்ய நாட்டின் மாபெரும் தலைவராக, உலகின் அதிகாரம் மிக்க தலைவர்களில் ஒருவரும் ரஷ்யாவை முப்பது ஆண்டுகள் முடிசூடா மன்னனாக ஆண்டு அந்த நாட்டில் லெனின் அடியொற்றி கம்யூனிசப் புரட்சியை நிகழ்த்திக் காட்டிய இணையற்ற சாதனை மனிதன் என்பதனாலா என நமக்குத் தெரியவில்லை. ஆனால், ஸ்டாலின் என்றால் ரஷ்ய மொழியில் என்ன பொருள் தெரியுமா? ரஷ்ய மொழியில் ஸ்டாலின் என்றால் இரும்பு எனப் பொருளாகும். ரஷ்யத் தலைவர் ஸ்டாலினின் இந்தப் பெயர் அவரது புனைப்பெயர் என்பதுதான் உண்மை. பெயருக்கு ஏற்றாற்போலவே ஸ்டாலின் அவர்கள், இரும்பின் உறுதியுடனும் வலிமையுடனும் ரஷ்யாவின் தலைவராகத் திகழ்ந்தார்.

அதுபோலவே **நமது தலைவர் தளபதி ஸ்டாலின் அவர்களும் இரும்பின் வலிமையுடன் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் தமிழ்நாடு அரசையும் ஆள்வினையுடன் நடத்தி வருகிறார். உறுதி குலையாத இரும்பு மனம் மட்டுமல்ல; கனிந்த இயல்பும் அவரது ஆளுமையின் சுடர்விடும் அம்சம் என்பதை தளபதியின் செயல்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன.** கீழடி அகழாய்வுப் பணிகளை ஒன்றிய அரசு தொடராமல் திடீரென நிறுத்திவிட்டது. அதன் சூட்சுமத்தை சட்டெனப் புரிந்து கொண்ட முதல்வர் அவர்கள், தமது அரசின் சார்பில் அந்த அரும் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ளும் பொறுப்பினை ஏற்றார்; உரிய நிதியை வழங்கினார். இன்று கீழடியில், தமிழ்நாடு அரசு அமைத்துள்ள அருங்காட்சியகத்தை ஒரு முறை சென்று பார்த்தால்தான் தெரியும் எத்தகைய அரும் சாதனையை தளபதி தனது பொன்னாட்சியில் நிகழ்த்தி தமிழர் நாகரிகத்தின் தொன்மைப் பெருமைதனை உலகுக்கு உணர்த்தியுள்ளார் என்பது தெரிய வரும். தொடர்ந்து, சிவகளை உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் அகழ்வு ஆராய்ச்சிகளை புது உத்வேகத்துடன் தொடர்ந்திட ஆணையிட்டார். அத்துடன் தேவைப்படும் நிதியும் உற்சாகமும் இடைவிடாமல் கிடைத்திடவும் ஆணை பிறப்பித்தார். அதன் விளைவுதான் இன்று உலகே மூக்கில் விரல் வைத்து வியக்கும் வண்ணம் தமிழர்கள் 5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பைப் பயன்படுத்தினர் என்ற இனிக்கும் செய்தியை உலகுக்குப் பறைசாற்றி மகிழ்ந்தார். ஆக, ஸ்டாலின் அதாவது இரும்பு மனிதர் என்பது நமது பாசத் தலைவர் தளபதி அவர்களுக்கு எத்துணை சாலப் பொருத்தமானது என்பதை அறிந்து இறும்பூது கொள்கிறோம்.

**நல்லாட்சி நாயகர்:**

பத்தாண்டு இடைவெளிக்குப் பிறகு, 2021இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மாபெரும் வெற்றி பெற்று தமிழ்நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் தளபதி அரியணையில் அமர்ந்தார். மழைப் பொழிவுக்காக ஏங்கும் பாலை நிலம் போல வாடிக் காத்திருந்த தமிர்நாட்டு மக்களின் பெருத்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் கழகம் தேர்தலுக்கு முன்னர் 505 வாக்குறுதிகள் அடங்கிய தேர்தல் அறிக்கைதனை கழகத் தலைவர் தளபதி வழங்கி இருந்தார். அது தி.மு.க. என்ற ஒரு அரசியல் கட்சியின் தேர்தல் காலத்தில் அளிக்கப்படும் வழக்கமான உறுதிமொழிகள் அல்ல. இந்தியாவில் பல கட்சிகள் பெயரளவுக்கு தேர்தல் வாக்குறுதிகள் தருவதும் ஆட்சியைப் பிடித்தவுடன் அவற்றை இம்மியளவும் மதிக்காமல் மறப்பதும் வாடிக்கை. உதாரணத்துக்கு 11 ஆண்டுகளுக்கு முன்னர் 2014இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் பாரதிய ஜனதா கட்சியின் வாக்குறுதிகளைச் சொல்லலாம். வெளிநாடுகளில் இந்தியப் பணக்காரர்கள் பதுக்கி வைத்துள்ள கள்ளப் பணம் அனைத்தும் கைப்பற்றப்பட்டு நாட்டுக்குத் திரும்பக் கொண்டு வரப்படும்; அந்த மலைநிகர்த்த பணக் குவியலில் இருந்து இந்திய நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவரின் வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் ரூபாய் சேர்க்கப்படும் என்று அன்று பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளராக நிறுத்தப்பட்ட நரேந்திர மோடி பல்வேறு பிரச்சாரக் கூட்டங்களில் உறுதியளித்திருந்தார்.

இது மட்டுமா? வேலையின்மைக் கொடுமையைக் களைய ஆண்டொன்றுக்கு 2 கோடி புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று வாக்குறுதியையும் அளித்தாரே. அதன்படி, மோடி பதவிக்கு வந்த பின்னர் கடந்த 11 ஆண்டுகளில் 22 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டுமே. வேலைத் தேடும் இளைஞர்கள் அனைவருக்கும் வேலை கிடைத்திருக்க வேண்டுமே. நடந்ததா என்ன? இல்லையே! மாறாக கடந்த 45 ஆண்டுளில் இல்லாத அளவுக்கு வேலை இல்லாத் திண்டாட்டம் இந்தியாவில், குறிப்பாக வட மாநிலங்களில் தலைவிரித்து ஆடுகிறதே. தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் நாள்தோறும் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் பிழைப்புத் தேடி குடிபெயர்ந்து வருகிறார்களே. இதுவல்லவா உண்மை நிலை.

தேர்தலில் வென்று பிரதம அமைச்சராக வந்த நரேந்திர மோடி அவர்கள், 11 ஆண்டுகள் கடந்த பிறகும் இந்த மிக முக்கியமான வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அது குறித்து பேசுவதும் இல்லை. மக்கள், பிரதமர் மோடிக்கு தொடர்ந்து இந்த வாக்குறுதி பற்றி கேள்விகள் எழுப்பி வந்தாலும் அவர் அதைப் பற்றி மூச்சு விடுவதில்லை. அதற்கு ஒருபடி மேலே சென்று கட்சியிலும் ஆட்சியிலும் அவரது வலதுகரமாகப் பார்க்கப்படும் உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்களோ இதெல்லாம் ஒரு "ஜும்லா"; அவ்வளவுதான் என்று தெனாவட்டாக பொதுவெளியில் சொல்கிறார். ஜும்லா என்றால் என்ன அர்த்தம்? இந்திஉருது மொழியில் ஜும்லா என்றால் 'அர்த்தமில்லாத பேச்சு'. அதாவது 'சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னேன்' என்று சவடால் பேர்வழிகள் பேசும் பேச்சும் சொல்லும்தான் ஜும்லா என வடக்கில் சொல்லப்படுகிறது. இவர்கள் இந்தியா என்ற மாபெரும் நாட்டை, 146 கோடி மக்கள் வாழும் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டை பிரதமராக, உள்துறை அமைச்சராக கடந்த 11 ஆண்டுகளாக ஆட்சி செய்து வருகின்றனர். எத்தகைய கேவலம்? எத்துணை அவலம்?

**சொன்னதைச் செய்வோம் கலைஞர்:**

ஆனால், அரை நூற்றாண்டு காலம் தமிழினத் தலைவராகவும், 19 ஆண்டுகள் தமிழ்நாட்டின் முதல்வராகவும் திகழ்ந்து தமிழ்ச் சமுதாயம் தலைநிமிர்ந்து வாழ வழிவகுத்துத் துணை நின்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அடிக்கடி சொன்ன பீடுநிறை முழக்கம் **"சொன்னதைச் செய்வோம்; செய்வதையே சொல்வோம்"**, அதனை ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு முறையும் உறுதிபட நிகழ்த்திக் காட்டினார். **கலைஞர் வழியில் அரசையும், ஆட்சியையும் நடத்தும் தளபதி அவர்கள், 2021இல் அளித்த தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் முனைப்புடன் செயல்படுத்தி வருகிறார். நான்கு ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் தமிழ்நாட்டு மக்களுக்கு, தான் அளித்த 505 வாக்குறுதிகளில் 90 விழுக்காடு அளவிற்கு முழுமையாக நிறைவேற்றப்பட்டுவிட்டன.** இந்தச் செய்தியை, கடந்த 19.2.2025 அன்று வடசென்னையில் 712 குடும்பங்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் சத்தியவாணி முத்துநகர், சந்திரயோகி சமாதி, ராதாகிருஷ்ணபுரம் பகுதியில் கட்டப்பட்ட புது வீடுகளை மக்களுக்கு வழங்கிய நிகழ்ச்சியில் பேசும்போது தளபதி அவர்கள் பெருமையுடன் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதுதான் சிறப்பானது. "சொன்னதை மட்டுமல்ல சொல்லாததையும் செய்கிறோம்" என்றும் தனது உரையில் தளபதி அவர்கள் கூறினார்கள். ஆம்! வட சென்னை பகுதிகளையும் தென் சென்னை மற்றும் மத்திய சென்னைக்கு நிகராக மேம்படுத்த கழக அரசு 6,500 கோடி ரூபாய் மதிப்பில் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன என்ற இனிய செய்தியையும் முதலமைச்சர் தளபதி அவர்கள் தெரிவித்தார்.



டி.ஆர்.பாலு
கழகப் பொருளாளர்
மக்களவைக் கழகக் குழுத் தலைவர்

**வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு:**

அதுமட்டுமல்ல, தி.மு.க. தேர்தல் அறிக்கை என்பது தமிழ்நாட்டை இந்தியாவிலேயே அனைத்து நிலைகளிலும் முதன்மையான மாநிலமாக வளர்த்தெடுக்க உருவாக்கப்பட்ட ஒரு மாஸ்டர் பிளான் என்றால் மிகையாகாது. 2030இல் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு டிரில்லியன் அளவிற்கு உயர்த்துவதை இலக்காகக் கொண்டு அதற்கான கொள்கைகள், திட்டங்கள், தொழில்வளக் கட்டமைப்பு, சரியான உத்திகள் என அனைத்தையும் உள்ளடக்கி எழுதப்பட்ட ஆவணம்தான் தி.மு.க. அளித்த 2021 சட்டப்பேரவைத் தேர்தல் அறிக்கை. தளபதியின் தலைமையில் உள்ள தமிழ்நாடு அரசு அதில் 90 சதவிகிதம் வரை நான்கு ஆண்டுகள் முடியும் முன்னரே நிறைவேற்றிவிட்டது மகத்தான ஈடற்ற சாதனை அல்லவா?

**குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1000 ரூபாய், மகளிருக்கு கட்டணமில்லா பேருந்துப் பயணம், 40 லட்சம் பேருக்கு புதிய வேலை வாய்ப்புகள், 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் பயன் பெற்ற 6.5 லட்சம் மாணவர்கள், இல்லம் தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, 12 லட்சம் பேருக்கு வீட்டுமனைப் பட்டா, ரூபாய் 5059 கோடியில் 23 மாவட்டங்களில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தில் 44,608 வீடுகள், புதுமைப் பெண் திட்டத்தில் கல்லூரி மாணவியருக்கு மாதம் ரூ.1000, தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் கல்லூரி மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 1000 உதவித்தொகை, அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ஏற்கனவே உள்ள மதிய உணவுடன் புதிதாக காலைச் சிற்றுண்டி என தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனைப் பட்டியல் மிகவும் நீளமானது. வியக்க வைக்கிறது!**

**சூழும் பகையும் மொழிப்போர் முரசமும்:**

தளபதி மு.க.ஸ்டாலின் ஆட்சியில் தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் பெருகும் மின்னல் வேக வளர்ச்சியைக் கண்டு பொல்லாங்கு மனதினர் ஆட்சி அதிகாரத்தின் துணை கொண்டு எப்படியாவது நம் மாநிலத்தையும் திராவிட மாடல் அரசையும் முடக்கிப் போடும் கேடுகெட்ட வேலையில் முனைப்புடன் இறங்கிவிட்டனர். ஆளுநரை ஏவிவிட்டு, ஏட்டிக்குப் போட்டியான காரியங்களை எல்லாம் ஒன்று விடாமல் செய்ய வைத்தும், சட்டப்பேரவை இயற்றிய மக்கள்நலச் சட்டங்களை ஆண்டுக்கணக்கில் கிடப்பில் போட்டு மாநில உரிமைகளை காலடியில் மிதிக்கும் ஜனநாயக விரோதக் காரியங்களை செய்ய வைத்து வேடிக்கை காட்டுகின்றனர் ஒன்றியத்தின் உச்சாணிக் கொம்பில் உள்ளவர்கள். சமூக அநீதியின் சின்னமான 'நீட்' தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளித்திடும் சட்டத்திற்கு நான்கு ஆண்டுகளாக ஒப்புதல் தராமல் நிறுத்தி வைத்திருக்கும் வஞ்சகச் செயல் ஒரு சிறு எடுத்துக்காட்டு. இதுவொரு புறமிருக்க தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை பறித்திட ஒன்றிய மானியக் குழுவின் புதிய நெறிமுறை விதிகள். ஏற்கனவே அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்வேறு பல்கலைக்கழகங்கள் ஆளுநரின் சண்டித்தனத்தால் துணை வேந்தர் இல்லாமல் தத்தளிக்கின்றன. இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக தி.மு.க. அரசு தொடுத்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

ஒன்றிய மனிதவள அமைச்சகம், இந்தியை கட்டாயமாகப் புகுத்தும் மும்மொழிக் கொள்கை, குலக் கல்வியை மறைமுகமாகத் திணித்து சமூகநீதிக்குக் குந்தகம் விளைவிக்கும் புதிய கல்விக் கொள்கை 2020-ஐ நாம் ஏற்றுச் செயல்படுத்தினால்தான் ஒன்றிய அரசின் நிதியுதவி வழங்கப்படும் என மிரட்டுகிறது. ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளிப்படையாக அச்சுறுத்தல் விடுகிறார். தமிழ்நாடு அடிபணிய மறுத்தால் நமக்குக் கிடைக்க வேண்டிய 5000 கோடி ரூபாயை தர முடியாது என்று சொல்கிறார். அவரது இந்த ஆணவப் பேச்சு குறித்து முதல்வர் தளபதி அவர்கள் ஒரு வன்மையான கண்டனக் கடிதம் எழுதினார். சென்ற ஆண்டு தொடக்கத்தில் பெஞ்ஜால் புயலின் கோரத் தாண்டவத்தால் சென்னை உள்ளிட்ட 18 மாவட்டங்கள் வரலாறு காணாத பாதிப்புக்கு ஆளாயின. நிவாரணப் பணிகளுக்காகவும், மக்களுக்கு இழப்பீடு வழங்கிடவும் நாம் கேட்டது ரூபாய் 37,000 கோடி. ஆனால், இன்றுவரை ஒன்றிய அரசின் தேசியப் பேரிடர் நிதியிலிருந்து சல்லிக் காசுகூட கிடைக்கவில்லை.

ஆக, ஒன்றிய அரசின் திட்டம்; ஓரவஞ்சனை எல்லாம் தெளிவாகத் தெரிகிறது. ஒருபக்கம் ஆளுநரை வைத்து அராஜகம், மறுபுறம் தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரில் இந்தித் திணிப்பு, இன்னொரு பக்கம் வரிப் பகிர்வில் உரிய பங்கை வழங்க மறுப்பது. நாம் தரும் வரி 100 ரூபாயில் இருந்து வெறும் 29 ரூபாய் மட்டுமே நமக்கு திரும்பத் தருவது. ஆனால், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு 330 ரூபாய் அளவுக்கு அதாவது அவர்கள் ஒன்றியத்துக்கு தரும் வரியைப்போல மூன்று மடங்குக்கும் அதிகமாக நிதியை வாரி வழங்கும் அடாவடி. இப்படி உரிய நிதியைத் தராமல் தமிழ்நாட்டின் நிதி நிலையைச் சீர்குலைக்கும் வஞ்சக சூழ்ச்சி. விடுதலை பெற்ற இந்தியாவில் கடந்த 75 ஆண்டுகளில் ஒன்றியத்தை ஆட்சி செய்த எந்த அரசும் இத்தகைய கொடும் பாதகச் செயல்களால் தமிழ்நாட்டை முற்றுகை யிட்டுத் தாக்குதல் நடத்தவில்லை; தாக்கிடத் எண்ணியதுமில்லை, துணிந்ததும் இல்லை.

**10,000 கோடி ரூபாயை ஒன்றியம் தந்தாலும் மும்மொழித் திட்டத்தை ஏற்க முடியாது; முதல்வர் திட்டவட்டம்:**

கடலூர் நிகழ்ச்சி ஒன்றில் (22.2.2025) பேசிய நமது தமிழ்நாடு முதல்வர் அவர்கள், **"பத்தாயிரம் கோடி ரூபாயைக் கொட்டிக் கொடுத்தாலும் இந்தியைத் திணித்துத் தமிழை அகற்றி, தமிழக மாணவர்களின் எதிர்காலத்தை சீரழிக்கக் கூடிய தீங்கான மும்மொழிக் கொள்கையை தமிழ்நாடு அரசு ஒரு நாளும் ஏற்காது"** என புதுடெல்லியில் உள்ள ஒன்றிய ஆட்சியாளர்களின் செவிப்பறை உணரும் அளவுக்கு இடிமுழக்கம் செய்தது போல் உரக்கக் கூறிவிட்டார். அவர்கள் நிதி தர மறுத்தாலும் கவலை இல்லை. பள்ளி மாணவர்களின் தரமான கல்விக்குத் தேவைப்படும் நிதி முழுவதையும் மாநில அரசே வழங்கும் என்றும் மக்களுக்கு உறுதி அளித்துள்ளார்.

**தமிழே அறம்; தமிழே அரண்:**

நாம் திராவிட இயக்கத் தீரர்கள் பெரியார், அண்ணா, கலைஞர் வழிவந்தவர்கள். உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு என்பது நமது பரம்பரைக் குணம். "இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்; ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்; மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி" என்பது கலைஞர் நமக்குக் கற்றுத் தந்துள்ள சூளுரை. அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு மற்றுமொரு மொழிப் போரைச் சந்திக்கும் நிலைக்கு தமிழர்களாகிய நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதுதான் இன்றைய நிதர்சனமான நிலை.

நமது துணை முதல்வர் தம்பி உதயநிதியும் தமிழ் மொழி காக்கவும் தமிழ்நாட்டின் உரிமைகளைப் பெற்றிடவும் எதற்கும் தயார் என அறைகூவல் விடுத்துள்ளார். பகை நம்மைப் பதம் பார்க்கத் துடித்திருக்கும் சூழலில் தான், நமது தலைவர் தளபதி அவர்கள் **"தமிழே நமது அறம்; தமிழே நமது அரண்"** என பறைசாற்றிவிட்டார். ஆம், எத்துணை பொருள் பொதிந்த வாசகம்!

**தமிழ் நமக்கு அரண் என்றால் இன்றைக்கு நம் உயிர் மூச்சாம் தமிழ் மொழிக்கு அரண் தளபதி அவர்கள் மட்டுமே. தமிழ் கூறும் நல்லுலகம் அப்படித்தான் தளபதியைப் பார்க்கிறது. எனவே, தமிழர் பெரும்படை தளபதியின் பின்னால் அணிவகுத்து நிற்பதே நமது அறம். தமிழ் நமக்குக் கற்றுத் தந்துள்ள அறம்.**

தமிழ்நாட்டின் நலத்தையும், வளத்தையும் பெருக்கிட கடந்த நான்கு ஆண்டுகளாக ஆட்சித் தேரை அறவழியில் செலுத்தி முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள், அல்லும் பகலும் அரும்பணி ஆற்றி வருகிறார். மாணவச் செல்வங்கள், மகளிர், தொழிலாளர்கள், தொழில் முனைவோர், ஆசிரியர்கள், ஏழை எளியோர், திரைத் துறையினர், அயலகத் தமிழர்கள், வெளிமாநிலத் தமிழர்கள், பக்திப் பெருமக்கள் என அனைத்துத் தரப்பு மக்களின் தேவைகளை கேட்டறிந்தும் தானே தந்தை நிலையில் இருந்து சிந்தித்தும் ஒன்று விடாமல் நிறைவேற்றித் தருவதை களிப்புடன் செய்கிறார். தலைவர் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் மக்கள் பணியைப் பார்க்கும்போது நினைவுக்கு வரும் திருவாசகம், **"வேண்டத் தகுந்தது அறிவோய் நீ, வேண்டிய முழுதும் தருவோய் நீ"** என்பதுதான்.

மார்ச் திங்கள் முதல் நாளாம் தனது 72வது அகவையில் அடியெடுத்து வைக்கும் நம் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நீடுழி வாழ்க என்று வாழ்த்தி மகிழும் இந்த நேரத்தில் அவரது அரும் பணிக்கு அயராமல் துணைநிற்போம்; வெற்றி வாகை சூட்டி பெருமை கொள்வோம் என சூளுரைப்போம்.

**வாழ்க தலைவர்!**

**வாழ்க பல்லாண்டு!**

**வெல்லட்டும் தமிழ்!**